







மாஸ்டர் சர்வேஷ்

கன்னியாகுமரி - சென்னை

14 நாட்களில் 750+ கி.மீ.





SDG விழிப்புணர்வு ஓட்டம் 2021

POWERED BY

Sairam INSTITUTIONS

விழிப்புணர்வு அலைகளை ஏற்படுத்துவோம் !
நம்பிக்கையின் விதைகளை விதைப்போம் !

02.10.2021 – 15.10.2021



SDG விழிப்புணர்வு ஓட்டம் 2021

POWERED BY Sairam INSTITUTIONS

சர்வேஷ் 9 வயது நிரம்பிய ஒரு தடகள வீரர், அவர் கன்னியாகுமரியில் தொடங்கி, தென் இந்தியாவின் முக்கிய பகுதிகளின் வழியாக **14 நாட்களில் 750 கிமீ** தனது தொடர் ஓட்டத்தின் முடிவில் தமிழகத்தின் தலைநகரான சென்னையை அடைந்தார். **அக்டோபர் 2, 2021, காந்தி ஜெயந்தி அன்று அவர் தனது ஓட்டத்தை கன்னியாகுமரியில் உள்ள திருவள்ளுவர் சிலையில் தொடங்கி, சென்னை வள்ளுவர் கோட்டத்தில் அக்டோபர் 15, 2021, டாக்டர். ஏ.பி.ஜே.அப்துல்கலாம் பிறந்த நாளன்று வெற்றிகரமாக நிறைவு செய்தார்.** இந்த மொத்த பயணத்திலும் சர்வேஷ் ஐக்கிய நாடுகளின் சபையின் நிலையான வளர்ச்சி இலக்குகள் குறித்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கிறார். மேலும், தமிழகத்தில் அவரது பயண தடத்தில், அவர் இரண்டு லட்சம் விதை உருண்டைகளை வழி நெடுகிலும் விதைத்துக் கொண்டே பயணித்தார். அவர் மேற்கொண்ட இந்த அரிய பயணம் மற்றும் குறிக்கோள் யாரும் முயலாத, எந்த சாதனைப்பட்டியலிலும் இடம் பெறாத ஒரு செயலாக அமையப் பெற்றது. சர்வதேச ரோட்டரி சங்கம் மற்றும் சர்வதேச ஜூனியர் சேம்பர் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் இந்த இளம் தடகள வீரரின் சாதனைக்கு தோள் கொடுத்து ஊக்கமளித்தனர். **சாதனையின் மகுடமாக சர்வேஷ் ஆசிய சாதனை புத்தகம் மற்றும் உலக யூனியன் சாதனை பட்டியல் ஆகியவற்றில் இடம் பிடித்துள்ளார்.**

சாதனையாளர் சர்வேஷ்

பதக்கங்கள்/பரிசுகள் (2015 முதல் 2021 வரை)



பதக்கங்கள் - 146

சான்றிதழ்கள் - 256

வென்ற பரிசுகள் - 62

ரொக்க பரிசுகள் - 16

தேசிய மற்றும் சர்வதேச சாதனைகள்

- ஒரு கிலோ மீட்டர் தூரம் பின்னோக்கி ஓட்டத்தில் இந்திய சாதனையாளர்
  (2017ல் 5வது வயதில் செய்த சாதனை)
- 6வது வயதில் 486 கிமீ
  தூரத்தை கடந்துள்ளார்
- கடந்த ஆறு ஆண்டுகளில் 56 மாரத்தான்
  ஓட்டங்களில் பங்குபெற்ற ஒரே இளம் பங்கேற்பாளர்

விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள்

- உலகளாவிய அதிசயிக்கத்தக்க குழந்தை விருது 2020
- உலகளாவிய குழந்தை சாதனையாளர் விருது 2020
- உலகளாவிய சாதனையாளர் விருது 2020
- இளம் வழிகாட்டி விருது 2019 (எரிகள் எரிக்சன் விருது)
- தேசிய சிறப்பு சாதனையாளர் விருது 2019





நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள்

SDG விழிப்புணர்வு ஓட்டம் 2021

எதிர்காலத்தை கற்பனை செய்யுங்கள் அதை நிகழ்த்திக் காட்டுங்கள்...

ஐக்கிய நாடுகளின் சபை 2015ல் தனது உறுப்பு நாடுகளுடன் இணைந்து உருவாக்கிய நிலையான வளர்ச்சி இலக்குகள் என்கிற 17 உலகளாவிய இலக்குகளை அறிவித்தது. 2030 ஆம் ஆண்டுக்குள் இந்த புவியில் வாழும் அனைவரையும் வறுமையில் இருந்து மீட்டு அவர்களுக்கு அமைதியும், செழிப்புடன் கூடிய வாழ்வையும் வழங்குவது தான் அதன் முதன்மையான இலக்கு.

இந்த நிலையான வளர்ச்சி இலக்குகளை நிஜமாக்குவதிலும், இந்த உலகை வருங்காலத் தலைமுறைகளுக்கு இன்னும் சிறந்த வாழிடமாக விட்டுச் செல்லவும் சாய்ராம் கல்வி நிறுவனங்கள் உறுதி கொள்கிறது, துணை நிற்கிறது. இந்த இலக்குகளை அடைய நாம் அனைவரும் நம் கடமையை செய்ய வேண்டும், அரசாங்கம், தனியார் துறை, குடிமைச் சமூகம் மற்றும் நாம் இணைந்து இந்த உலகைப் புனரமைப்போம், இன்னும் கூடுதல் பொழிவுடன் மிளிரச் செய்வோம்.

இந்த இலக்குகளை அடைய நாம் அனைவரும் நம் பங்களிப்பை செய்வோம்,



நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள்

Sairam SDG ACTION PROGRAM

நாம் அனைவரும் ஒன்றிணைந்து **வறுமையையும்,** **பட்டினியையும்**
இல்லாத ஒரு அற்புதமான உலகத்தை உருவாக்கி
அதில் அனைவருக்கும் **ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வினை** பேணி,
தரமான கல்வியினை போதித்து **பாலின சமத்துவத்தை** நிலை நாட்டுவோம்.
எங்கும் **சுகாதாரம் மற்றும் சுத்தமான நீர்,** **நியாய விலையில் தூய மின்சக்தி**
பெற்று தன்னிறைவு அடையச் செய்து **கண்ணியமான வேலையையும்,**
பொருளாதார வளர்ச்சியையும் பெற்ற சமுதாயத்தை உருவாக்கி,
தொழில், கண்டறிதல் மற்றும் உள்கட்டமைப்பை மேம்படுத்தி
ஏற்றத் தாழ்வுகள் அற்ற சமுதாயத்தை ஏற்படுத்துவோம்.
வளமான நகரங்களில் நம் சமூகங்களை வாழ வழிவகைச் செய்து
பொறுப்பான நுகர்வோர் மற்றும் உற்பத்தி கொண்டு புவியை கட்டிக் காத்து
பருவநிலை மாற்றத்தை கட்டுக்குள் கொண்டு வந்து
உலக வெப்பமயமாதலை திறம்பட எதிர்கொண்டு **நீர்வாழ் உயிரினங்கள்**
மற்றும் **நிலத்தில் வாழும் உயிரினங்களை** போற்றி பாதுகாப்போம்.
வலுவான அமைப்புகளின் வழியே **அமைதியையும், நீதியையும்**
நிலை பெற செய்வோம்.
இலக்குகளுக்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து
மேம்பட்ட நல்லதொரு உலகம் செய்வோம்.

ஒன்றிணைந்து செயல்படுவோம்...



நிறுவனத் தலைவர், சாய்ராம் கல்விக் குழுமம்

SDG விழிப்புணர்வு ஓட்டம் 2021

POWERED BY Sairam INSTITUTIONS

தொடர் ஓட்டத்தின் தொடக்க நாள்/இடம்

திருவள்ளுவர் சிலை, கன்னியாகுமரி
காலை 7 மணி
சனிக்கிழமை, அக்டோபர் 2, 2021

நிலையான வளர்ச்சி இலக்குகள் தொடர் ஓட்டத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்



திரு. T. மனோ தங்கராஜ்

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர்
தமிழ்நாடு அரசு

ஊக்கமும், ஆக்கமும், அன்பும்
திரு. சாய் பிரகாஷ் லியோமுத்து,
தலைவர் மற்றும் முதன்மை நிர்வாக அதிகாரி, சாய்ராம் கல்வி குழுமம்





சீரிய துவக்கம் - குமரி முனையிலிருந்து





வாழ்த்துக்களும், பாராட்டுக்களும்
அமைச்சர் மற்றும் நிர்வாகிகள்





இலக்கே மந்திரம்





போற்றுதல்களும், பாராட்டுக்களும்





ஒவ்வொரு மைல் கல்லும், கல்வெட்டுக்களாக...


















என்றென்றும் சாய்ராம் கல்விக் குழும ஆதரவுடன்...























இயற்கைத் தடைகளைப் பொருட்படுத்தாத தடையற்ற தொடர் ஓட்டம்




















செய்திகளில் சாதனையாளர்....

TRINITY MIRROR

Sairam school's Sharvesh runs for sustainable development awareness

Chennai, Oct 3:

Sharvesh, a student of Sairam Matriculation School West Tambaram, has begun his run from Kanniyakumari to Chennai in a bid to raise awareness about the 'Global Goals for Sustainable Development of the United Nations'.

State Information and Technology minister, T Mano Thangaraj, flagged off the awareness run from Thiruvalluvar Statue on Saturday.

Aged nine, Sharvesh will cover the distance, roughly 750 kms, in about 10 days.



During his record-breaking journey, he will also plant seeds. He is carrying with him approximately two lakh seed balls for the purpose. The likes of Rotary International and Junior Chamber International have associated themselves with this first-of-its-kind attempt.

VIRTUAL TIMES

Master Sharvesh SDG Awarness Run 2021





Chennai Oct 02 Master Sharvesh aged 9 Years athlete who is on a mission to run all the way from Kanyakumari to Chennai (Distance around 750 Kms) today (ie 02nd October) he started his journey at Valluvar Statue Kanyakumari reaches Chennai span of 10 days. During his journey he will spread awareness about the sustainable Development Goals of the United Nations at various touch points across the entire stretch and also carrying 2 lakh seed balls and throwing them throughout the entire journey . Today Minister for Information and Technology Shri.T.Mano Thangaraj Flagging off Event , Sai Prakash Leo Muthu CEO – Sairam Institutions, R.Sateesh Kumar Trustee, Munusamy, Bala Subramanian and others Participated.

செய்திகளில் சாதனையாளர்....

THE NEW INDIAN EXPRESS

Kanniyakumari to Chennai, 9-yr-old runs for awareness

EXPRESS NEWS SERVICE @ Chennai

SHARVESH, a student of Sairam Matriculation School West Tambaram, has begun his run from Kanniyakumari to Chennai in a bid to raise awareness about the 'Global Goals for Sustainable Development of the United Nations'. Aged nine, Sharvesh will cover the distance, roughly 750 kms, in about 10 days. During his record-breaking journey, he will also plant seeds. He is carrying with him approximately two lakh seed balls for the purpose. The likes of Rotary International and Junior Chamber International have associated themselves with this first-of-its-kind attempt. State Information and Technology minister, T Mano Thangaraj, flagged off the awareness run from Thiruvalluvar Statue on Saturday.



Minister T Mano Thangaraj running with Sharvesh | EXPRESS

தமிழ் முரசு



கன்னியாகுமரியில் விழிப்புணர்வு தொடர் ஓட்டத்தை அமைச்சர் மனோதங்கராஜ் தொடங்கி வைத்தார்.

கன்னியாகுமரியில் இருந்து சென்னைக்கு 9 வயது மாணவரின்

நிலையான வளர்ச்சி இலக்குகள் பற்றிய விழிப்புணர்வு தொடர் ஓட்டம்

அமைச்சர் மனோதங்கராஜ் தொடங்கி வைத்தார்

நாகர்கோவில், அக்.2- சென்னை சாய்ராம் மெட்ரிக் பள்ளி மாணவர் 9 வயது மாஸ்டர் சர்வேஷின் நிலையான வளர்ச்சி இலக்குகள் பற்றிய விழிப்புணர்வு தொடர் ஓட்டத்தை கன்னியாகுமரியில் அமைச்சர் மனோதங்கராஜ் இன்று தொடங்கி வைத்தார்.

காந்தி பிறந்தநாளை முன்னிட்டு நிலையான வளர்ச்சி இலக்குகள் விழிப்புணர்வு தொடர் ஓட்டத்தை சென்னை சாய்ராம் மெட்ரிக் பள்ளி மாணவர் மாஸ்டர் சர்வேஷ் கன்னியாகுமரியில் உள்ள காந்தி மண்டபம், திருவள்ளுவர் சிலையில் இருந்து தொடங்கி சென்னை நோக்கி புறப்பட்டார். இவர் கன்னியாகுமரியில் இருந்து தொடங்கி, தென் இந்தியாவின் முக்கிய பகுதிகளின் வழியாக 10 நாட்களில் 750 கிமீ தனது தொடர் ஓட்டத்தின் முடிவில் தமிழகத்தின் தலைநகரான சென்னையை அடைகிறார். இவரது நிலையான வளர்ச்சி இலக்குகள் விழிப்புணர்வு தொடர் ஓட்டத்தை தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் மனோ தங்கராஜ் கன்னியாகுமரியில் இன்று காலையில் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

அப்போது அமைச்சர் மனோதங்கராஜ் கூறியதாவது: வளர்ச்சிக்கான இலக்குகள் என்ற 17 அம்சங்களை வைத்து உலக நாடுகள் சுற்றுச்சூழல் பாதிப்பில் இருந்து உலகத்தை பாதுகாக்க வேண்டும் என்று முனைப்புடன் செயல்படுகிறது.

நிலைத்த நீடித்த வளர்ச்சி இலக்குகளை பொதுமக்கள் மத்தியில் கொண்டு செல்ல சென்னை சாய்ராம் பள்ளியின் மாணவன் சர்வேஷ் தொடங்கி இருக்கிறார். இவர் பல விருதுகள், பரிசுகள் பெற்றவர். சென்னை வரை 750 கி.மீ. தூரம் மராத்தான் ஓட்டம் ஓட இருக்கிறார். இந்த உலகம் இருக்கவேண்டும் என்றால் அனைவரும் ஒரு சூழியல் குறித்த விழிப்புணர்வுடன் வாழ வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

தியில் கொண்டுசெல்ல சென்னை சாய்ராம் பள்ளியின் 10 வயதை எட்டுகின்ற மாணவன் சர்வேஷ் பல விருதுகள், பரிசுகள் பெற்றவர் இப்போது நமது அய்யன் திருவள்ளுவர் சிலையில் இருந்து சென்னை வரை 750 கி.மீ தூரம் மாரத்தான் ஓட்டம் ஓட இருக்கிறார். இந்த உலகம் இருக்க வேண்டும் என்றால் அனைவரும் ஒரு சூழியல் குறித்த விழிப்புணர்வுடன் வாழ வேண்டும். வறுமை ஒழிக்கப்பட வேண்டும், பயிற்றநிலை ஏற்பட வேண்டும், சுத்தமான சுகாதாரமான குடிநீர் கிடைக்க வேண்டும். நிலைத்த நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் மத்தியில் மத்தியில் செல்ல வேண்டும் என்று இந்த மாரத்தான் ஓடுகின்ற சர்வேசை தமிழக அரசின் சார்பில் வாழ்த்தி வரவேற்று பயணத்தை தொடங்கி வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த மொத்த பயணத்திலும் சர்வேஷ் ஐக்கிய நாடுகளின் சபையின் நிலையான வளர்ச்சி இலக்குகள் குறித்த விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்படுத்தவிருக்கிறார். இதை தவிர, தமிழகத்தில் அவரது பயண தடத்தில், அவர் 2 லட்சம் விதை உருண்டைகளை வழி நெடுகிலும் விதைக்கவிருக்கிறார். அவர் மேற்கொள்ளவிருக்கும் இந்த செயல், இதுவரை யாரும் செய்ய துணியாத ஒரு செயலாக, எந்த சாதனைபட்டியலிலும் இடம் பெறாத ஒரு செயலாக கருதப்படுகிறது. மாஸ்டர் சர்வேஷ் என்ற ஒன்பது வயது நிரம்பிய ஒரு தடகள வீரர் இவர் சென்னை மேற்கு தாம்பரத்தில் உள்ள சாய்ராம் மெட்ரிக் பள்ளியில் படித்து வருகிறார். இவர் பள்ளியில் படித்து கொண்டு பல்வேறு தடகள போட்டிகளில் கலந்து கொண்டு 146 பதக்கங்கள், 62 வெற்றி பரிசுகள், 256 சான்றிதழ்கள், 16 ரொக்க பரிசுகளை பெற்று சாதனைகளை படைத்துள்ளார். ஒரு கி.மீ தூரம் பின்னோக்கி ஓட்டத்தில் 2017ம் ஆண்டு 5 வயதில் இந்திய அளவில் சாதனை படைத்துள்ளார். 6 வயதில் 486 கி.மீ. தூரத்தை கடந்துள்ளார். கடந்த ஆறு ஆண்டுகளில் 56 மாரத்தான் ஓட்டங்களில் பங்குபெற்ற ஒரே இளம் பங்கேற்பாளர் ஆவார். இந்த தொடர் ஓட்ட நிகழ்வில் பங்கேற்கும் மாஸ்டர் சர்வேஷை ஊக்குவிக்கும் வகையில் சாய்ராம் கல்விக் குழுமத்தின் தலைவர் மற்றும் முதன்மை நிர்வாகி அதிகாரி சாய் பிரகாஷ் லியோ முத்து கலந்து கொண்டு வெற்றியடைய தனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டார். மேலும் இந்நிகழ்ச்சியில் சாய்ராம் கல்விக் குழுமத்தின் அறங்காவலர்கள் முனுசாமி, சதீஷ்குமார், பாலசுப்ரமணியன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

முரசு Sat, 02 October 2021
tm.dinakaran.com/c/63498726

சென்னை மாணவரின் விழிப்புணர்வு தொடர் ஓட்டம்



▶ கன்னியாகுமரியில் சென்னை மாணவரின் விழிப்புணர்வு தொடர் ஓட்டத்தை தொடங்கி வைத்து அமைச்சர் மனோதங்கராஜ் மாணவருடன் சிறிது தூரம் ஓடினார்.

கன்னியாகுமரியில் அமைச்சர் துவக்கி வைத்தார்

நாகர்கோவில், அக்.3: காந்தி பிறந்தநாளை முன்னிட்டு நிலையான வளர்ச்சி இலக்குகள் விழிப்புணர்வு தொடர் ஓட்டத்தை சென்னை சாய்ராம் மெட்ரிக் பள்ளி மாணவர் மாஸ்டர் சர்வேஷ் கன்னியாகுமரியில் உள்ள காந்தி மண்டபம், திருவள்ளுவர் சிலையில் இருந்து தொடங்கி சென்னை நோக்கி புறப்பட்டார். இவர் கன்னியாகுமரியில் இருந்து தொடங்கி, தென் இந்தியாவின் முக்கிய பகுதிகளின் வழியாக 10 நாட்களில் 750 கிமீ தனது தொடர் ஓட்டத்தின் முடிவில் தமிழகத்தின் தலைநகரான சென்னையை அடைகிறார். இவரது நிலையான வளர்ச்சி இலக்குகள் விழிப்புணர்வு தொடர் ஓட்டத்தை தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் மனோ தங்கராஜ் கன்னியாகுமரியில் இன்று காலையில் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

அப்போது அமைச்சர் மனோதங்கராஜ் கூறியதாவது: வளர்ச்சிக்கான இலக்குகள் என்ற 17 அம்சங்களை வைத்து உலக நாடுகள் சுற்றுச்சூழல் பாதிப்பில் இருந்து உலகத்தை பாதுகாக்க வேண்டும் என்று முனைப்புடன் செயல்படுகிறது.

நிலைத்த நீடித்த வளர்ச்சி இலக்குகளை பொதுமக்கள் மத்தியில் கொண்டு செல்ல சென்னை சாய்ராம் பள்ளியின் மாணவன் சர்வேஷ் தொடங்கி இருக்கிறார். இவர் பல விருதுகள், பரிசுகள் பெற்றவர். சென்னை வரை 750 கி.மீ. தூரம் மராத்தான் ஓட்டம் ஓட இருக்கிறார். இந்த உலகம் இருக்கவேண்டும் என்றால் அனைவரும் ஒரு சூழியல் குறித்த விழிப்புணர்வுடன் வாழ வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

செய்திகளில் சாதனையாளர்....

தினமலர்
உண்மையின் உரைகல்

தரமான கல்வியை வலியுறுத்தி 750 கி.மீ. தொலைவுக்கு மாரத்தான் ஓட்டம்



கன்னியாகுமரியில் மாரத்தான் ஓட்டத்தை கொடியசைத்து தொடங்கி வைக்கிறார் தமிழக தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ்.

கன்னியாகுமரி, அக். 2: தரமான கல்வி, ஆரோக்கியமான வாழ்வு உள்ளிட்ட 17 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, சென்னை சாய்ராம் மெட்ரிக் பள்ளியில் 5 ஆம் வகுப்பு படிக்கும் மாணவர் சர்வேஷ், கன்னியாகுமரி காந்தி மண்டபம் முன்பிருந்து சென்னை வரை விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டத்தை சனிக்கிழமை தொடங்கினார்.

இந்த ஓட்டத்தை தமிழக தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மாணவர் சர்வேஷ் ஏற்கனவே பல்வேறு தடகளப் போட்டிகளில் பங்கேற்று 146 பதக்கங்கள் பெற்றுள்ளார். கடந்த 6 ஆண்டுகளில் 46 மாரத்தான் ஓட்டங்களில் பங்கேற்றுள்ளார். தற்போது தொடங்கியிருக்கும் மாரத்தான் மூலமாக தினமும் 75 கி. மீ. தொலைவுக்கு ஓடும் இவர் மொத்தம் 750 கி.மீ. தொலைவினை கடந்து வரும் 11ஆம் தேதி சென்னையில் நிறைவு செய்ய திட்டமிட்டுள்ளதாக தெரிவித்தார். மேலும் வழி நெடுகிலும் 2 லட்சம் விதைப் பந்துகளை தூவி புதிய சாதனையை நிகழ்த்தவும் உள்ளார்.

மாரத்தான் தொடக்க நிகழ்ச்சியில் சாய்ராம் கல்விக்குழுமத் தலைவர் சாய் பிரகாஷ் லியோ முத்து, அறங்காவலர்கள் முனுசாமி, சதீஷ் குமார், பாலகுப்பிரமணியன், கன்னியாகுமரி மாவட்ட திமுக பொறியாளர் அணி அமைப்பாளர் ஆர்.எஸ். பார்த்தசாரதி, கன்னியாகுமரி பேரூராட்சி முன்னாள் தலைவர் குமரி ஸ்டீபன், மாவட்ட திமுக மீனவரணி முன்னாள் அமைப்பாளர் நசரேத் பசலியான், மாவட்ட திமுக விவசாய அணி துணை அமைப்பாளர் ஜே.ஜே.ஆர்.ஜெஸ்டின் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மக்கள் குரல்
03-10-2021 7

சாய்ராம் பள்ளி 9 வயது மாணவன் சர்வேஷ் கன்னியாகுமரியிலிருந்து சென்னைக்கு 10 நாளில் 750 கி.மீ. தொடர் ஓட்டம்

அமைச்சர் மனோ தங்கராஜ், சாய்பிரகாஷ் லியோமுத்து துவக்கி வைத்து வாழ்த்து



கன்னியாகுமரி, அக்.3- மேற்கு தாம்பரம் சாய்ராம் மெட்ரிக் பள்ளி மாணவன் சர்வேஷ், இன்று காந்தி பிறந்தநாளை முன்னிட்டு நிலையான வளர்ச்சி இலக்குகள் விழிப்புணர்வு தொடர் ஓட்டத்தை கன்னியாகுமரியில் உள்ள காந்தி மண்டபம், திருவள்ளுவர் சிலையிலிருந்து தொடங்கி சென்னை நோக்கி புறப்பட்டான். தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் டி.மனோ தங்கராஜ் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

சர்வேஷை ஊக்குவிக்கும் வகையில் சாய்ராம் கல்விக் குழுமத்தின் தலைவர் சாய்பிரகாஷ் லியோமுத்து கலந்து கொண்டு ஓட்டம் வெற்றியடைய தனது வாழ்த்துக்களை தெரிவித்தார். சாய்ராம் கல்விக் குழும அறங்காவலர்கள் முனுசாமி, சதீஷ்குமார், பாலகுப்ரமணியன் ஆகியோரும் கலந்து கொண்டனர். கன்னியாகுமரியில் தொடங்கி, தென்னிந்தியாவின் முக்கிய பகுதிகளின் வழியாக 10 நாட்களில் 750 கி.மீ. தனது தொடர் ஓட்டத்தின் முடிவில் தமிழகத்தின் தலைநகரான சென்னையை அடைகிறான் சர்வேஷ்.

இந்த பயணத்தில் சர்வேஷ் ஐக்கிய நாடுகளின் சபையின் நிலையான வளர்ச்சி இலக்குகள் குறித்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்த இருக்கிறார். இதை தவிர தமிழகத்தில் அவரது பயண தடத்தில், அவர் 2 லட்சம் விதை உருண்டைகளை வழி நெடுகிலும் விதைக்க இருக்கிறார். அவர் மேற்கொள்ள இருக்கும் இச்செயல் இதுவரை யாரும் செய்யத் துணியாத ஒரு செயலாக எந்த சாதனை பட்டியலிலும் இடம் பெறாத ஒரு செயலாக கருதப்படுகிறது.

9 வயதே ஆன சர்வேஷ், தடகள வீரர் ஆவார். சென்னை மேற்கு தாம்பரத்தில் உள்ள சாய்ராம் மெட்ரிக் பள்ளியில் படித்து வருகிறார். பள்ளியில் படித்து கொண்டு பல்வேறு தடகள போட்டிகளில் கலந்து கொண்டு 146 பதக்கங்கள், 62 பரிசுகள், 256 சான்றிதழ்கள், 16 ரொக்கப் பரிசுகளை பெற்று சாதனை படைத்துள்ளான். 1 கி.மீ. தூரம் பின்னோக்கி ஓட்டத்தில் 2017ஆம் அண்டு 5 வயதில் இந்தியாவில் சாதனை படைத்துள்ளான். 6 வயதில் 486 கி.மீ. தூரத்தை கடந்துள்ளான். கடந்த 6 ஆண்டுகளில் 56 மாரத்தான் ஓட்டங்களில் பங்கேற்ற ஒரே இளம் பங்கேற்பாளன் இவன்.

மாலை யுகம்
Maalai Yugam நாளிதழ்
RNI No.TNTAM/2016/73487

சாய்ராம் மெட்ரிக் பள்ளியின் மாணவர் மாஸ்டர் சர்வேஷ் நிலையான வளர்ச்சி இலக்குகள் பற்றி விழிப்புணர்வு தொடர் ஓட்டம் தொடக்கம்





தாம்பரம், அக்.02 மாஸ்டர் சர்வேஷ் ஒன்பது வயது நிரம்பிய ஒரு தடகள வீரர்.இவர் சென்னை மேற்குதாம்பரத்தில் உள்ள சாய்ராம் மெட்ரிக் பள்ளியில்படித்துவருகிறார். இவர் பள்ளியில் படித்து கொண்டுபல்வேறுதடகள போட்டிகளில் கலந்து கொண்டு

146 பதக்கங்கள், 62 வெற்றி பரிசுகள், 256 சான்றிதழ்கள், 16 ரொக்க பரிசுகளை பெற்று சாதனைகளைபடைத்துள்ளார். ஒரு கிலோ மீட்டர் தூரம் பின்னோக்கி ஓட்டத்தில் 2017 ஆம் ஆண்டு 5 வயதில் இந்திய அளவில் சாதனைபடைத்துள்ளார். 6வயதில் 486கி.மீ.தூரத்தை கடந்துள்ளார். கடந்த 6 ஆண்டுகளில் 56 மாரத்தான் ஓட்டங்களில் பங்கு பெற்ற ஒரே இளம் பங்கேற்பாளர்.

அக்டோபர் 2, 2021 காந்தி பிறந்த நாளை முன்னிட்டு நிலையான வளர்ச்சிஇலக்குகள்2021) விழிப்புணர்வு தொடர் ஓட்டத்தை மாஸ்டர் சர்வேஷ் அவர்கள் கன்னியாகுமரியில் உள்ள காந்தி மண்டபம், திருவள்ளுவர்சிலையில் இருந்துதொடங்கிசென்னை நோக்கி புறப்படுகிறார். இவர் கன்னியாகுமரியில் இருந்து தொடங்கி, தென் இந்தியாவின் முக்கிய பகுதிகளின் வழியாக 10 நாட்களில் 750 கிமீ தனதுதொடர் ஓட்டத்தின் முடிவில் தமிழகத்தின்தலைநகரான சென்னையைஅடைகிறார். நிலையான வளர்ச்சி இலக்குகள் (ஐனுபு யுறயசநஎநௌள சுரஸீ 2021) விழிப்புணர்வு தொடர் ஓட்டத்தை மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. வ. மனோ தங்கராஜ் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்தமொத்தபயணத்திலும் சர்வேஷ் ஐக்கியநாடுகளின் சபையின நிலையான வளர்ச்சி இலக்குகள் குறித்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தவிருக்கிறார். இதை தவிர, தமிழகத்தில் அவரது பயண தடத்தில், அவர் இரண்டு லடசம் விதை உருண்டைகளை வழி நெடுகிலும் விதைக்கவிருக்கிறார். அவர் மேற்கொள்ளவிருக்கும் இந்த செயல், இதுவரை யாரும் செய்ய துணியாத ஒரு செயலாக, எந்த சாதனைபட்டியலிலும் இடம் பெறாதஒருசெயலாக கருதப்படுகிறது.

இந்த தொடர் ஓட்ட நிகழ்வில் பங்கேற்கும் மாஸ்டர் சர்வேஷ் அவர்களை ஊக்குவிக்கும் வகையில் சாய்ராம கல்விக் குழுமத்தின் தலைவர் மற்றும் முதன்மைநிர்வாகி அதிகாரிதிரு.சாய்பிரகாஷ் லியோமுத்து கலந்து கொண்டு வெற்றியடைய தனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டார். மேலும்இந்நிகழ்ச்சியில் சாய்ராமகல்விக்குழுமத்தின அறங்காவலர்கள் திரு. முனுசாமி,திரு.சதீஷ்குமார், திரு. பாலசுப்ரமணியன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மகிழ்ச்சி நிறைந்த மதுரை வரவேற்பு... 06.10.2021







இதயம் கனிந்த வாழ்த்துக்களுடன் திருச்சி வரவேற்பு...10-10-2021

திருச்சி மாவட்ட ஆட்சியர் திரு. S. சிவராசு, IAS மற்றும் திருச்சி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. சக்திவேல் ஆகியோர் தொடர் ஓட்டம் வெற்றி பெற பொன்னாடை அணிவித்து வாழ்த்தினர். சிவானி கல்விக்குழு தலைவர் செல்வராஜ், சாய்ராம் கல்விக் குழும நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்







செய்திகளில் சாதனையாளர்....

தினமணி
திங்கள்கிழமை, 11 அக்டோபர் 2021

குமரி –சென்னைக்கு விழிப்புணர்வுத் தொடர் ஓட்டம்

திருச்சி வந்த சிறுவனுக்கு வரவேற்பு



கொடியை வழங்கி சிறுவன் சர்வேஷை வரவேற்கும் மாநகர காவல்துறை துணை ஆணையர் சக்திவேல். உடன், சிவானி மற்றும் சாய்ராம் கல்விக் குழும நிர்வாகிகள் உள்ளிட்டோர். (இடது) தொடர் ஓட்டமாக திருச்சிக்கு வந்த சர்வேஷ்.

திருச்சி, அக்.10: உலக மக்கள் அனைவரும் பசியின்றி, அமைதியாக வாழ வலியுறுத்தி குமரி முதல் சென்னை வரை 750 கி.மீ. விழிப்புணர்வுத் தொடர் ஓட்டமாக திருச்சிக்கு ஞாயிற்றுக்கிழமை வந்த சிறுவன் சர்வேஷ்க்கு வரவேற்பளிக்கப்பட்டது.

சென்னை தாம்பரம் சாய்ராம் மெட்ரிக் பள்ளி மாணவரான சர்வேஷ் தரமான கல்வி, நிலையான வளர்ச்சி இலக்குகள் என்கின்ற ஐநா சபையின் இலக்குகளின்படி, 2030 ஆம் ஆண்டுக்குள் இப்பூமியில் வாழும் அனைவரும் பசி, பட்டினியின்றி அமைதியாக வாழ வேண்டும் என்னும் குறிக்கோளை மையமாகவைத்து தொடரோட்டம் மேற்கொண்டுள்ளார்.

காந்தி ஜெயந்தியன்று கன்னியாகுமரியில் தொடங்கிய தொடரோட்டத்தில், சுமார் 400 கி. மீ. கடந்து ஞாயிற்றுக்கிழமை திருச்சியை வந்தடைந்த அவரை, வழி நெடுகிலும் மாவட்ட மாநகர காவல்துறை அதிகாரிகள் வரவேற்று உற்சாகப்படுத்தினர். அந்த வகையில் மாவட்ட ஆட்சியர் க. சிவராசு, திருச்சி மாநகர காவல் துணை ஆணையர் சக்திவேல் ஆகியோர் சிறுவனை வரவேற்று, அவரது 750 கி. மீ. தொடரோட்டம் வெற்றியடைய வாழ்த்து தெரிவித்து ஊக்கப்படுத்தினர்.

மேலும், திருச்சி சிவானி கல்விக் குழுமத் தலைவர் செல்வராஜ், லயன்ஸ் கிளப் பொறுப்பாளர்கள் பிரசாந்த், வின்சன்ட், சாய்ராம் கல்வி குழும அறங்காவலர்கள் மு. முனுசாமி, பாலசுப்ரமணியன் மற்றும் ஆசிரியர்கள், செஞ்சிலுவைச் சங்க பொறுப்பாளர்கள், மருத்துவர்கள், பொதுமக்களும் சிறுவனுக்கு வாழ்த்து தெரிவித்து வழியனுப்பினர்.

மாலைமலர்
கன்னியாகுமரியில் இருந்து சென்னை வரை

மராத்தான் ஓட்டத்தை தொடங்கிய சிறுவனுக்கு திருச்சியில் வரவேற்பு

திருச்சி, அக்.10– சென்னை தாம்பரம் பகுதியைச் சேர்ந்த 9 வயது சர்வேஷ் என்கிறசிறுவன் கடந்த 2ம் தேதி கன்னியாகுமரியில் இருந்து இருந்து சென்னை வரை மராத்தான் ஓட்டப் பந்தயத்தை தொடங்கி யுள்ளார். அவர் இன்றுகாலை 11 மணி அளவில்திருச்சிக்கு வந்தடைந்தார். அவருக்கு திருச்சி மண்ணார்புரத்தில் போலீஸ் துணை ஆணையர் சக்திவேல் தலைமையில் உற்சாகமாக வரவேற்பளிக் கப்பட்டது. பின்னர்சிறுவன் சர்வேஷ் நிருபர் களுக்கு பேட்டி அளித்தார். அப் போது அவர் கூறியதாவது;– நான் சிறு வயதிலிருந்தே மராத்தான் உள்ளிட்டஓட்டப் பந்தயங்களில் கலந்துகொள் வதில் ஆர்வம் கொள்வேன். அப்பா, அம்மா எனக்கு உறுதுணையாக இருக்கிறார் கள். அந்த வகையில் கடந்த 2ம் தேதி கன்னியாகுமரியில் இருந்து என்னுடைய சாகச பயணத்தை தொடங்கி உள்ளேன்.

இன்றுதிருச்சி வந்த டைந்தேன். எனக்கு வரவே றபளித்த அனைவருக் கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் சில தினங்களில் சென்னையை சென்று அடைந்து விடுவேன். இது வரைக்கும் 400 கிலோமீட்டர் ஓடி வந்து உள்ளேன். இவ்வாறு அவர் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியின் செல்வராஜ். முனுசாமி பாலசுப்ரமணியன் உட்பட திரளானோர் பங்கேற்றனர்.



புதுச்சேரி மற்றும் தமிழகம்
மாலை எக்ஸ்பிரஸ்
MAALAI EXPRESS
மாலை நாளிதழ்
மாறிலம் பயனுறு!

750 கிலோமீட்டர் தொடர் ஓட்டம் சிறுவனுக்கு உற்சாக வரவேற்பு

திருச்சி, அக். 11- 750 கிலோமீட்டர் தொடர் ஓட்டம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் 9 வயது சிறுவனுக்கு திருச்சி உற்சாக வரவேற்பு.



ஐநா சபை தனது உறுப்பு நாடுகளுடன் இணைந்து உருவாக்கிய நிலையான வளர்ச்சி என்கிற 17உலகளாவிய இலக்குகளை அறிவித்தது. குறிப்பாக 2030 ஆம் ஆண்டுக்குள் இந்த பூமியில் வாழும் அனைத்து மக்களும் பசி, பட்டினியின்றி அமைதியாக வாழ வேண்டும் என்றஇலக்கைகுறிக்கோளாக கொண்டுள்ளது. இதை மக்களிடம் சேர்க்கும் வண்ணம், தாம்பரத்தில் உள்ள சாய்ராம் மெட்ரிக் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படிக்கும் மாணவன் சர்வேஷ்(9) 750 கிலோமீட்டர் தொடர் ஓட்டம்மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். கடந்த காந்தி ஜெயந்தியன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள காந்தி மண்டபம், திருவள்ளுவர் சிலை அருகில் தொடங்கி சென்னை வரை தொடரோட்டமாக ஓடி வருகிறார்.

இந்நிலையில் 400 கிலோ மீட்டர் கடந்துஇன்று திருச்சி வந்தடைந்தார். இவரை திருச்சி மாநகர காவல்துறை துணை ஆணையர் சக்திவேல் பூங்கொத்து வழங்கி வரவேற்றார். அவரது இந்த தொடரோட்டப் பயணம் வெற்றியடைய வாழ்த்து தெரிவித்து ஊக்கப்படுத்தினார். பின்னர் தனது இலக்கான சென்னையை நோக்கி மீண்டும் தொடரோட்டத்தை தொடங்கினார்.

வெற்றி ஓட்டம் - விழுப்புரத்தில் - 13.10.2021

விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் மதிப்புமிகு. D. மோகன், IAS அவர்களும், விழுப்புரம் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் டாக்டர். N. ஸ்ரீநாதா அவர்களும் மாஸ்டர் சர்வேஷின் தொடர் ஓட்டம் வெற்றி எய்திட தங்களது ஊக்கம் நிறைந்த, உன்னதமான வாழ்த்துக்களையும் வழங்கி வழியனுப்பி வைத்தனர்.





சென்னை தாம்பரத்தில் ஐந்தாம் வகுப்பு படிக்கும் ஒன்பது வயது மாணவன் மாஸ்டர் சர்வேஷ் தரமான கல்வி நிலையான வளர்ச்சி அனைத்து மக்களும் பட்டினி இல்லாமல் ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் என்கிற உயர்ந்த நோக்கத்தோடு அதனை 2030ஆம் ஆண்டு இறுதிக்குள் அடைந்து விட வேண்டும் என்கிற குறிக்கோளை முன்வைத்து கன்னியாகுமரியில் தொடங்கி சென்னை வரை சுமார் 750 கிலோ மீட்டர் தூரம் தொடர் ஓட்டத்தினை துவக்கியுள்ளார் மாணவன் சர்வேஷ் இன்று விழுப்புரம் வருகை தந்த மாணவர் சர்வேஷை காவல்துறை கண்காணிப்பாளர் ஸ்ரீநாத பூங்கொத்து கொடுத்து வரவேற்றார் அத்துடன் விழுப்புரம் வழியாக சென்னையை நோக்கி மாணவன் சர்வீஸ் தன்னுடைய தொடர் ஓட்டத்தை தொடர்ந்தார்.





மாணவர் தொடர் ஓட்டம்
கலெக்டர், எஸ்.பி., வாழ்த்து

விழுப்புரம், அக். 14–
கன்னியாகுமரியில் இருந்து சென்னைக்கு தொடர் ஓட்டத்தில் சுடுபடும் மாணவருக்கு கலெக்டர் மற்றும் எஸ்.பி., வாழ்த்து தெரிவித்தனர்.
சென்னை, தாம்பரம் சாய்ராம் மெட்ரிகுலேஷன் பள்ளி ஐந்தாம் வகுப்பு மாணவர் சர்வேஷ், 9; இவர், ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகள் இணைந்து உருவாக்கிய தரமான கல்வி, நிலையான வளர்ச்சியை வலியுறுத்தியும்; 2030ம் ஆண்டு இறுதிக்குள் அனைத்து மக்களும் பட்டினியின்றி ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் எனவும் கன்னியாகுமரியில் இருந்து சென்னை வரை 750 கி.மீ., தொடர் ஓட்டத்தில் சுடுபட்டுள்ளார்.
காந்தி ஜெயந்தியன்று கன்னியாகுமரியில் துவங்கிய அவர், நேற்று 600 கி.மீ., தூரத்தைக் கடந்து விழுப்புரம் வருகை தந்தார்.
கலெக்டர் மோகன் மற்றும் எஸ்.பி., ஸ்ரீநாதா ஆகியோர் மாணவர் சர்வேஷை வரவேற்று, வாழ்த்துக்கூறி அனுப்பி வைத்தனர்.
சாய்ராம் கல்விக்குழுமத் தலைவர் மற்றும் முதன்மைச் செயல் அதிகாரி சாய்பிரகாஷ் லியோ முத்து, செயல் இயக்குனர் முலுசாமி உடனிருந்தனர்.

■ கன்னியாகுமரியில் தொடங்கி சென்னை வரை விழிப்புணர்வு தொடர் ஓட்டமாக செல்லும் தாம்பரம், சாய்ராம்பள்ளி மாணவர் சர்வேஷ் விழுப்புரம் வந்தபோது எஸ்.பி., ஸ்ரீநாதா பாராட்டி பரிசு வழங்கினார்.



செறிவான ஓட்டம் - செங்கல்பட்டில் - 14.10.2021

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மதிப்புமிகு. ராகுல்நாத், IAS அவர்களும், செங்கல்பட்டு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மதிப்புமிகு. விஜயகுமார் அவர்களும் சாதனையாளர் மாஸ்டர் சர்வேஷின் தொடர் ஓட்டம் வெற்றி எய்திட தங்களது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் வழங்கி, வழியனுப்பி வைத்தனர்.





கன்னியாகுமரி — சென்னை இடையே

700 கி.மீ. ஓடி வரும் 9 வயது சிறுவன்!

செங்கல்பட்டில் ஆட்சியர் ராகுல்நாத், எஸ்.பி. விஜயகுமார் வரவேற்றனர்!!

செங்கல்பட்டு, அக். 15

செங்கல்பட்டுமாவட்டம் தாம்பரத்தில் இயங்கி வரும் தனியார் மெட்ரிகுலேஷன் பள்ளியில் 5ஆம் வகுப்பு படித்து வரும் 9வயது மாணவன் சர்வேஷ்.

இவர்கடந்தவருடம்காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரைவிழிப்புணர்வுபயணம் மேற்கொண்ட பெண்மணி குறித்து முகநூலில் வரும் வீடியோக்களில் கண்டு, அதை போல் தானும் ஓட வேண்டும் எனதனது தந்தை விசுவிடம் கூறியுள்ளார்.

இதுகுறித்து தந்தை விசு சர்வேஷ் பயிலும் சாய்ராம் மெட்ரிகுலேஷன் பள்ளி நிர்வாகத்துடன் பேசியுள்ளார். பள்ளி நிர்வாகத்தின் ஒத்துழைப்போடு 9வயதுசிறுவன் சர்வேஷ் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகள் இணைந்துஉருவாக்கியபசி, பட்டினியின்மை, நல்ல ஆரோக்கியம், தரமான கல்வி, நிலையான வளர்ச்சி உள்ளிட்ட 17வகையானஉலகளாவிய இலக்குகளை 2030–ஆம் ஆண்டுக்குள் அடைய வேண்டும் என்ற குறிக்கோளோடுதொடர்ஓட்டத்தை துவங்கினார்.

கடந்தஅக்டோபர்2காந்தி ஜெயந்திஅன்று கன்னியாகுமரிதிருவள்ளுவர்சிலையில் இருந்துசாதனைபயணத்தை துவங்கிசென்னைவள்ளுவர் கோட்டம் வரை 700கிலோ மீட்டர்பயணத்தை நாளொன்றுக்கு 60முதல்70கிலோமீட்டர்வரைதொடர்ஓட்டத்தில் ஈடுபட்டு வரும் சர்வேஷ். இதுவரை 124 மாரத்தான் போட்டிகளிலும், 160 பதக்கங்களும், 200க்கும் மேற்பட்ட சான்றிதழ்களையும் வாங்கி குவித்துள்ளார்.

மேலும், வரும்வழிகளில் மரம் வளர்ப்பு விழிப்புணர்வாகவிதைப்பந்துக்களைவீசியும்வருகிறார்.

இந்நிலையில் செங்கல்பட்டை நெருங்கிய சர்வேஷிக்கு மாவட்ட ஆட்சியர் ராகுல்நாத் மற்றும்மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் விஜயகுமார் ஆகியோர்பூங்கொத்துகொடுத்து வரவேற்றனர்.

மேலும் தொடர் ஓட்டத்தில்எந்தமாதிரியானநிகழ்வுகள் நடைபெற்றது எனவும் கேட்டறிந்தனர்.

தொடர்ந்துசர்வேஷ்தனது ஓட்டத்தை துவங்கினார்.

மேலும் நாளை இரவுக்குள் சென்னை வள்ளுவர் கோட்டத்தை சென்றடைவதாகசாதனைமாணவன்கூறினார்.

கனிவான தருணங்கள் - ஊரப்பாக்கம்

சாய்ராம் கல்வி குழுமத்தின் தலைவர் மற்றும் முதன்மை செயல் அதிகாரி
திரு. சாய்பிரகாஷ் லியோமுத்து அவர்கள்
மாஸ்டர் சர்வேஷை நெகிழ்ச்சியுடன் வாழ்த்தும் தருணம்





தலைநகர் சென்னையில் மாபெரும் வரவேற்பு















SDG
விழிப்புணர்வு
ஓட்டம் 2021
POWERED BY
Sairam INSTITUTIONS



மாண்புமிகு தமிழக முதல்வர்

உயர்திரு. M.K. ஸ்டாலின் அவர்கள்

நிலையான வளர்ச்சி இலக்குகள் தொடர் ஓட்டத்தை இனிதே நிறைவு செய்து வைத்தார்

நிகரில்லா தொடர் ஓட்டத்தின் நிறைவு நாள் / இடம்

வள்ளுவர் கோட்டம், சென்னை
காலை 8 மணி
சனிக்கிழமை, அக்டோபர் 16, 2021



மாண்புமிகு தமிழக முதல்வர்

உயர்திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்

சாய்ராம் பள்ளி மாணவன் மாஸ்டர் சர்வேஷின் மாரத்தான் ஓட்டத்தின்
நிறைவு விழாவில் கலந்து கொண்டு வாழ்த்தி, சிறப்புச் செய்தார்





சாய்ராம் பள்ளி மாணவன் மாஸ்டர் சர்வேஷின் மாரத்தான் ஓட்டத்தின்
நிறைவு விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர்
உயர்திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்
கலந்து கொண்டு சாதனைச் சான்றிதழ்களை வழங்கும் காட்சி





மாண்புமிகு முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் அன்புப் பரிசு - சாதனையாளர் சர்வேஷ்க்கு





twitter

M. K. Stalin
9h •

Like Page

ஐக்கிய நாடுகள் நிர்ணயித்திருக்கும் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த சாய்ராம் பள்ளி மாணவர் சர்வேஷ் குமரி வள்ளுவர் சிலையிலிருந்து சென்னை வள்ளுவர் கோட்டம் வரை 750 கி.மீ. மாரத்தான் ஓடியிருக்கிறார்.

அவரைப் பாராட்டி, மாபெரும் தமிழ்க் கனவு புத்தகம் வழங்கினேன்.



செய்திகளில் சாதனையாளர்....

TRINITY MIRROR

CM praises Sairam School student Sarvesh for 750-km SDG Awareness Run



To raise awareness among the common masses about the United Nations' Sustainable Development Global Goals (SDGs), 9-year-old boy Sarvesh studying in Sairam Matriculation School, West Tambaram completed 750 km run from Kanyakumari to Chennai. The 'SDG Awareness Run 2021' began on Gandhi Jayanti. Chief Minister Stalin congratulated Sarvesh and presented him a book. Health Minister M. Subramaniam, HR&CE Minister P.K. Sekar Babu, MLAs TRP Raja, Ezhilan, Sairam Group of Institutions CEO Sai Leo Prakash and officials are also seen.

VIRTUAL TIMES
NATIONAL EVENING ENGLISH DAILY PRACTICAL EXPOSE

Master Champ Sharvesh, a 9 year old 5th standard student of Sairam Institutions achievements



Chennai, Oct 18: Master Champ Sharvesh, a 9 year old 5th standard student of Sairam Institutions embarked on a marathon run from the Valluvar Statue in Kanyakumari to Valluvarkottam in Chennai with the aim of creating awareness about the Global Goals for Sustainable Development United Nations. He began the arduous journey on 2nd October (Gandhi Jayanthi) in the presence of Shri.Mano Thangaraj, Minister of Information & Technology, Government of Tamilnadu. He covered the entire stretch of around 750 kilometres in a span of close to two weeks. He has reached Chennai city successfully on Friday, 15th October 2021, which happens to be the birth anniversary of Dr.APJ Abdul Kalam, former President of India.

During his entire journey he was accorded overwhelming response not only from the government officials but also from public at large. People gathered in huge numbers to support and encourage the efforts of the young boy. District collectors and senior officials of the Police Department welcomed young Sharvesh at various district headquarters.

He handed over a flag depicting the various SDG Goals to the government officials, a detailed list of which has been enclosed.

Young Sharvesh weathered heavy rains across the entire stretch to near the completion of the 750 km long journey. All along the marathon run, he scattered 2 lakh seeds balls in the open areas along the highway.

His 2 week long journey culminated with the Closing Ceremony held at Chennai's Valluvarkottam on Saturday, 16th October 2021. Honourable Chief Minister of Tamil Nadu Thiru M. K. Stalin together with Honorable Health Minister Shri Ma Subramanian graced the occasion. Young athlete Sharvesh handed over the flags depicting the 16th and 17th Goals to the honourable health minister and chief minister respectively. The 16th Goal represents "Peace, Justice and Strong Institution" while the 17th Goal represents "Partnerships for the Goals". A cash award of Rs.1,00,000/- was presented by the Honourable Chief Minister of Tamil Nadu Shri. M.K.Stalin, as a token of Appreciation to Master Sharvesh.

Young Sharvesh also handed over a cheque of Rs.12,34,567/- towards Chief Minister Relief Fund on behalf of Sairam Institutions to the chief Minister Shri.M.K.Stalin in the presence of Shri. SaiPrakash LeoMuthu, CEO of Sairam Institutions.

செய்திகளில் சாதனையாளர்....

இந்து தமிழ் திசை

மாரத்தான் ஓட்ட நிறைவு விழா

சாய்ராம் பள்ளி மாணவர் சர்வேஷுக்கு முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து

● ரூ.1 லட்சம் பரிசு வழங்கினார்

■ சென்னை

கன்னியாகுமரியில் இருந்து சென்னை வரை மாரத்தான் தொடர் ஓட்டத்தில் பங்கேற்ற சென்னை சாய்ராம் மெட்ரிக் பள்ளி மாணவர் சர்வேஷுக்கு முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சென்னை தாம்பரம் சாய் ராம் மெட்ரிக் பள்ளியின் 9 வயது மாணவர் மாஸ்டர் சர்வேஷ், 'ஐக்கிய நாடுகளின் SDG (நீடித்த வளர்ச்சி) உலகளாவிய இலக்கு கள்' பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் கன்னியா குமரி வள்ளுவர் சிலை முதல் சென்னை வள்ளுவர் கோட்டம் வரையிலான மாரத்தான் ஓட் டத்தை தொடங்கினார்.



▸▸ சென்னை வள்ளுவர்கோட்டத்தில் நேற்று நடந்த தொடர் ஓட்ட நிறைவு விழாவில் முதல்வர் ஸ்டாலின் கலந்துகொண்டு, சாய்ராம் மெட்ரிக் பள்ளி மாணவர் சர்வேஷுக்கு வாழ்த்து தெரிவித்தார். அருகில் சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சாய்ராம் நிறுவனங்களின் தலைவர் சாய் பிரகாஷ் லியோமுத்து உள்ளிட்டோர்.

விதைப் பந்துகள்

அக்டோபர் 2-ம் தேதி காந்தி ஜெயந்தியன்று தமிழக தகவல், தொழில்நுட்பத் துறை அமைச்சர் மனோ தங்கராஜ் முன்னிலையில் அவர் இப்பயணம் தொடங்கினார். சுமார் 750 கி.மீ. தூரத்தை 2 வாரங் களுக்குள் கடந்த அவர், அப்துல் கலாம் பிறந்தநாளான கடந்த 15-ம் தேதி தொடர் ஓட்டத்தை நிறைவு செய்தார். கனமழையை பொருட்படுத்தாமல் தொடர்ந்து ஓடிய அவர், இப்பயணத்தின்போது 2 லட்சம் விதைப் பந்துகளை நெடுஞ்சாலையில் திறந்த பகுதி களில் வீசினார்.

சென்னை வள்ளுவர் கோட் டத்தில் நேற்று நடந்த நிறைவு விழாவில் முதல்வர் ஸ்டாலின் பங்கேற்று, சாதனை இளம் வீரர் சர்வேஷுக்கு ரூ.1 லட்சம் ரொக்கப் பரிசு வழங்கி வாழ்த்தினார். சுகா தாரத் துறை அமைச்சர் மா.சுப்பிர மணியனும் கலந்துகொண்டு வாழ்த்தினார். 16, 17-வது SDG இலக்குகளை சித்தரிக்கும் கொடி களை முதல்வர், அமைச்சரிடம் சர்வேஷ் வழங்கினார்.

நிகழ்ச்சியில், சாய்ராம் நிறு வனங்கள் சார்பாக கரோனா நிவா ரண நிதிக்காக ரூ.12,34,567-க்கான காசோலையை சாய்ராம் நிறுவ னங்களின் தலைவர் சாய் பிரகாஷ் லியோமுத்து முன்னிலையில் முதல்வர் ஸ்டாலினிடம் மாணவர் சர்வேஷ் வழங்கினார். ●

மக்கள் குரல்



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், வள்ளுவர் கோட்டத்தில், தாம்பரம் - சாய்ராம் பள்ளி மாணவன் சர்வேஷ், ஜக்கிய நாடுகளின் எஸ்டிஜி உலகளாவிய இலக்குகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 2-ந் தேதி கன்னியாகுமரி, வள்ளுவர் சிலை அருகிலிருந்து மாரத்தான் ஓட்டத்தை தொடங்கி 15-ந் தேதி சென்னை வள்ளுவர் கோட்டம் வரை 750 கி.மீட்டர் தூரம் மாரத்தான் ஓட்டத்தை வெற்றிகரமாக முடித்ததற்காக, அம்மாணவனை பாராட்டி புத்தகம் வழங்கினார். அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பி. ராஜா, என்.எழிலன், சாய்ராம் பள்ளி நிர்வாகிகள் மற்றும் மாணவனின் பெற்றோர் உள்ளனர்.

செய்திகளில் சாதனையாளர்....

மாலை முரசு



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில், தாம்பரம்–சாய்ராம் பள்ளி மாணவன் மாஸ்டர் சர்வேஷ் ஐக்கிய நாடுகளின் எஸ்.டி.ஜி. உலகளாவிய இலக்குகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 2.10.2021 அன்று கன்னியாகுமரி, வள்ளுவர் சிலை அருகிலிருந்து மாரத்தான் ஓட்டத்தை தொடங்கி 15.10.2021 அன்று சென்னை வள்ளுவர் கோட்டம் வரை 750 கிலோ மீட்டர் தூரம் மாரத்தான் ஓட்டத்தை வெற்றிகரமாக முடித்தற்காக, அம்மாணவனை பாராட்டி புத்தகம் வழங்கினார். உடன் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பி.ராஜா, டாக்டர் என்.எழிலன், சாய்ராம் பள்ளி நிர்வாகிகள் மற்றும் அம்மாணவனின்பெற்றோர்கள்உள்ளனர்.

தினகரன்

பள்ளி மாணவனுக்கு முதல்வர் வாழ்த்து



ஐ.நா. சபையின் எஸ்.டி.ஜி உலகளாவிய இலக்குகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கன்னியாகுமரியில் இருந்து சென்னை வள்ளுவர் கோட்டம் வரை தொடர் ஓட்டம் மேற்கொண்ட தாம்பரம் ஸ்ரீசாய்ராம் பள்ளி மாணவன் சர்வேஷை, முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டி, புத்தகம் வழங்கினார். அருகில், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, மா.சுப்பிரமணியன், எம்எல்ஏக்கள் டி.ஆர்.பி.ராஜா, டாக்டர் எழிலன், சென்னை தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் சிற்றரசு.

செய்திகளில் சாதனையாளர்....

மாலை யுகம்

சாதனைச் சிறுவனுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து



சென்னை, அக் 18, 14 நாளில் 750 கிலோ மீட்டர் தூரம் தொடர் ஓட்டம் ஓடி சாதனை செய்த சிறுவன் சர்வேசுக்கு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்து உள்ளார்.

சென்னை மேற்கு தாம்பரத்தில் உள்ள சாய்ராம் மெட்ரிக் பள்ளியில் 5ம் வகுப்பு படிக்கும் மாணவன் சர்வேஷ். கடந்த அக்டோபர் 2ம் தேதி கன்னியாகுமரியில் உள்ள காந்தி மண்டபத்தில் இருந்து சென்னை வள்ளுவர் கோட்டம் வரையிலான 750 கிலோமீட்டர் தொடர் ஓட்டத்தை சர்வேஷ் தொடங்கினார்.

இந்த தொடர் ஓட்டத்தை தமிழக தொழில்நுட்பத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிலையில் கன்னியாகுமரி முதல் சென்னை வரை 750 கிலோமீட்டர் தூரத்தை 14 நாட்கள் தொடர் ஓட்டம் மூலம் கடந்து சர்வேஷ் சாதனை படைத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பசி, பட்டினியின்மை, நல்ல ஆரோக்கியம், தரமான கல்வி, வறுமை ஒழிப்பு உட்பட 17 நிலையான வளர்ச்சி இலக்குகள் குறித்து வழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த தொடர் ஓட்டம் ஓடியதாக சிறுவன் சர்வேஷ் தெரிவித்து உள்ளார்

இந்த சாதனையை நிகழ்த்தியுள்ள சர்வேஷ்ஐ முதல அமைச்சர் மு.க. ஸ்டாலின் சனிக்கிழமை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்து உள்ளார். இந்நிகழ்வில் சேர்மேன் சாய்பிரகாஷ், லியோ முத்து கலந்துக் கொண்டனர்.

தினத்தந்தி

பள்ளி மாணவனை பாராட்டிய மு.க.ஸ்டாலின்



ஐக்கிய நாடுகளின் உலகளாவிய இலக்குகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கன்னியாகுமரி வள்ளுவர் சிலை அருகில் இருந்து சென்னை வள்ளுவர் கோட்டம் வரை 750 கி.மீ. தூரம் மாரத்தான் ஓட்டத்தை வெற்றிகரமாக முடித்த தாம்பரம் சாய்ராம் பள்ளி மாணவன் சர்வேஷை, முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பாராட்டி புத்தகத்தை வழங்கிய போது எடுத்த படம். அருகில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு ஆகியோர் உள்ளனர்.

மாலை தமிழகம்

750 கி.மீ., தொலை மாரத்தான்: சாய்ராம் மெட்ரிக்., பள்ளி மாணவன் சர்வேஷ் நிறைவு: புத்தகம் வழங்கி முதல்வர் வாழ்த்து!



சென்னை, அக். 18-

தாமாண கல்வி, ஆரோக்கியமான வாழ்வு உள்ளிட்ட, 17 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, சென்னை சாய்ராம் மெட்ரிக்., பள்ளியில், 5ம் வகுப்பு படிக்கும் சர்வேஷ், கன்னியாகுமரி காந்தி மண்டபம் முன்பிருந்து, சென்னை வரை, வழிப்புணர்வு மாரத்தான் ஓட்டத்தை, கடந்த, 2ம் தேதி தொடங்கினார். இந்த ஓட்டத்தை, அமைச்சர் மனோ தங்கராஜ், கொடியசைத்து துவக்கி வைத்தார்.

மாணவர் சர்வேஷ், ஏற்கனவே, பல்வேறு தட கனப் போட்டிகளில் பங்கேற்று, 146 பதக்கங்கள் பெற்றுள்ளார். கடந்த ஆண்டுகளில், 46 மாரத்தான் ஓட்டங்களில் பங்கேற்றுள்ளார். கடந்த, 2ம் தேதி தொடங்கிய மாரத்தான், நேற்றும், 75 கி.மீ., தொலைவை என நிர்ணயிக்கப்பட்டு, மொத்தம், 750 கி.மீ., தொலைவை கடந்து, சென்னையில் நிறைவு செய்ய திட்டமிட்டார். மேலும், வழி நெடுகிலும், இரண்டு லட்சம் விதைப் பந்துகளை தூவி புதிய சாதனையும் நிகழ்த்தினார்.

இந்த நிலையில், சென்னை வள்ளுவர் கோட்டத்தில், இன்று (16ம் தேதி) 750 கி.மீ., மாரத்தானை முடித்த சர்வேஷுக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின், ஒரு லட்சம் ரூபாய் பரிசுமற்றும் புத்தகம் வழங்கி வாழ்த்து தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் வி.கே.சேகர்பாபு, மா. சுப்பிரமணியன், சாய்ராம் கல்வி குழும தலைவர் சாய் பிரகாஷ் லியோ முத்து, அறங்காவலர்கள் முரளி சாமி, சதீஷ்குமார், பாலசுப்பிரமணியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். கன்னியாகுமரி முதல் சென்னை வரை 750 கிலோமீட்டர் தூரத்தை 14 நாட்கள் தொடர் ஓட்டம் மூலம் கடந்து சர்வேஷ் சாதனை படைத்துள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் பசி, பட்டினியின்மை, நல்ல ஆரோக்கியம், தரமான கல்வி, வறுமை ஒழிப்பு உட்பட 17 நிலையான வளர்ச்சி இலக்குகள் குறித்து வழிப் புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த தொடர் ஓட்டம் ஓடியதாக சிறுவன் சர்வேஷ் தெரிவித்தார்.

சாய்ராம் பள்ளி மாணவன்
மாஸ்டர் சர்வேஷின் மாரத்தான் ஓட்டத்தின்
நிறைவு விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர்

உயர்திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்

கலந்து கொண்டு வாழ்த்து

தாம்பரத்தில் உள்ள சாய்ராம் மெட்ரிக் பள்ளியின் 9 வயது மாணவர் மாஸ்டர் சர்வேஷ், ஐக்கிய நாடுகளின் SDG உலகளாவிய இலக்குகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் கன்னியாகுமரி வள்ளுவர் சிலை முதல் சென்னை வள்ளுவர்கோட்டம் வரை மாரத்தான் ஓட்டத்தை நிறைவு செய்தார். அவர் அக்டோபர் 2 ஆம் தேதி (காந்தி ஜெயந்தி) தமிழக அரசின் தகவல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் முன்னிலையில் இலட்சியப் பயணத்தைத் தொடங்கினார். அவர் சுமார் 750 கிலோமீட்டர் தூரத்தை இரண்டு வாரங்களுக்குள் கடந்து, இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர்.ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளில் (15.10.2021) வெற்றிகரமாக தொடர் ஓட்டத்தை நிறைவு செய்தார்.

அவரது முழு பயணத்தின் போது அவருக்கு அரசு அதிகாரிகள் மட்டுமின்றி பொதுமக்களிடமிருந்தும் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. சிறுவனின் முயற்சியை ஆதரிக்கவும் ஊக்குவிக்கவும் மக்கள் அதிக அளவில் திரண்டனர். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறையின் உயர் அதிகாரிகள் பல்வேறு மாவட்ட தலைமையகங்களில் இளம் சர்வேஷை வரவேற்றனர். அவர் பல்வேறு SDG இலக்குகளை சித்தரிக்கும் கொடிகளை அரசாங்க அதிகாரிகளிடம் பல்வேறு இடங்களில் வழங்கினார்.

சாதனையாளர் சர்வேஷ் 750 கிமீ தூரத் தொடர் பயணத்தில் ஆங்காங்கே கடும் வெயில் மற்றும் கனமழையை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. மராத்தான் ஓட்டத்தின் போது, அவர் 2 லட்சம் விதைப் பந்துகளை நெடுஞ்சாலையின் திறந்த பகுதிகளில் தூவினார்.

16 அக்டோபர் 2021, சனிக்கிழமை சென்னையில் வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற நிறைவு விழாவுடன் அவரது 2 வார தொடர் ஓட்டம் வெற்றிகரமாக நிறைவடைந்தது. மாண்புமிகு தமிழக முதல்வர் உயர்திரு மு.க.ஸ்டாலின் மற்றும் மாண்புமிகு சுகாதார அமைச்சர் உயர்திரு. மா. சுப்ரமணியம் மற்றும் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் உயர்திரு. P.K. சேகர்பாபு அவர்களும் இந்த நிறைவு விழாவில் கலந்து கொண்டு சாதனை வீரர் சர்வேஷை வாழ்த்தினர்.

இளம் சாதனை வீரர் சர்வேஷ் 16 மற்றும் 17வது இலக்குகளை சித்தரிக்கும் கொடிகளை முதலமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சரிடம் வழங்கினார். 16வது இலக்கு "அமைதி, நீதி மற்றும் வலுவான நிறுவனத்தை" பிரதிபலிக்கிறது, 17வது இலக்கு "இலக்குகளுக்கான கூட்டாண்மை" ஐ குறிக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் உயர்திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் சாதனை வீரர் சர்வேஷ்க்கு ரூ.1 லட்சம் ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.

சாய்ராம் நிறுவனங்களின் சார்பாக கொரோனா நிவாரண நிதிக்கு ரூ.12,34,567/- காசோலையை இளம் சர்வேஷ், சாய்ராம் நிறுவனங்களின் தலைவர் திரு. சாய் பிரகாஷ் லியோமுத்து முன்னிலையில் மாண்புமிகு முதல்வர் உயர்திரு. மு. க. ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்.

சாய்ராம் பள்ளி மாணவன் மாஸ்டர் சர்வேஷின்
சாதனை ஓட்டத்தின் நிகழ்வுகளை வலையொளியில்
பார்த்து வாழ்த்த வேண்டுகிறோம்.

02.10.2021, Kanyakumari

NEWS 7 TAMIL — https://youtu.be/uDF3YA2LYLs

புதிய தலைமுறை — https://www.youtube.com/watch?v=KcNTC6G5ZOQ

10.10.2021, Trichy

வெளிச்சம் தொலைக்காட்சி — https://www.youtube.com/watch?v=CO2eps7xjdA

14.10.2021 @ Chengalpattu

தந்தி THANTHI TV — https://youtu.be/vxBWOipjvXQ

16.10.2021 @ Valluvarkottam, Chennai,

SUN NEWS — https://youtu.be/T-ktniSsu7s

செய்திகள் — https://youtu.be/SFtt_JtX8CE

தந்தி THANTHI TV — https://youtu.be/fA2JUAvJNDk

NEWS 7 TAMIL — https://fb.watch/8GnhOq8A6s/

மாலை முரசு செய்திகள் — https://www.youtube.com/watch?v=DQIcaoSuthk

#SharveshforSDG #SairamSAP

SDG விழிப்புணர்வு ஓட்டம் 2021

POWERED BY

Sairam INSTITUTIONS

விழிப்புணர்வு அலைகளை ஏற்படுத்துவோம் !
நம்பிக்கையின் விதைகளை விதைப்போம் !

முயன்றால் முடியாதது
ஏதுமில்லை.

உழைக்கும் – ஆக்கும்
எப்போதும் தேவை!

அன்புடன்.
எம்.ஜே.முத்து



#SharveshforSDG #SairamSAP